## யூன்– 18 – திங்கள்

**புனித யூலியானா பல்கெனேரி**

**நான் உங்களுக்குச் சொல்கிறேன்: தீமை செய்பவரை எதிர்க்க வேண்டாம். மாறாக, உங்களை வலக் கன்னத்தில் அறைபவருக்கு மறுகன்னத்தையும் திருப்பிக் காட்டுங்கள்". *மத். 5:39*"**

### முதல் வாசகம் : 1அரசர் 21: 1 – 16

இவற்றுக்குப் பின் நிகழ்ந்ததாவது இஸ்ரயேலனாகிய நாபோத்துக்கு இஸ்ரயேலில், சமாரிய அரசன் ஆகாபின் அரண்மனை அருகில், ஒரு திராட்சைத் தோட்டம் இருந்தது. ஆகாபு நாபோத்திடம், "உன் திராட்சைத் தோட்டம் என் அரண்மனை அருகிலிருப்பதால், நான் அதைக் காய்கறித் தோட்டம் ஆக்கும்படி என்னிடம் கொடுத்து விடு. அதற்குப் பதிலாய் அதைவிட நல்ல திராட்சைத் தோட்டத்தை உனக்குத் தருவேன். உனக்கு விருப்பமானால், அதன் விலையை வெள்ளியாகத் தருகிறேன்" என்றான். அதற்கு நாபோத்து ஆகாபிடம், "என் மூதாதையரின் உரிமைச் சொத்தை நான் உமக்குக் கொடாதவாறு ஆண்டவர் என்னைக் காப்பாராக!" என்றான்."என் மூதாதையரின் உரிமைச் சொத்தை உமக்குக் கொடுக்க மாட்டேன்" என்று இஸ்ரயேலனாகிய நாபோத்து தன்னிடம் சொன்ன வார்த்தைகளை முன்னிட்டு, ஆகாபு ஆத்திரத்துடனும் கோபத்துடனும் தன் அரண்மனைக்கு வந்தான் முகத்தைத் திருப்பிக் கொண்டு தன் கட்டிலில் படுத்துக்கிடந்தான் உணவருந்த மறுத்துவிட்டான். அப்போது அவனுடைய மனைவி ஈசபேல அவனிடம் வந்து "நீர் ஏன் மனம் சோர்ந்திருக்கிறீர்? ஏன் உணவருந்தவில்லை?" என்று அவனைக் கேட்டாள்.அதற்கு அவன் அவளிடம், "நான் இஸ்ரயேலனாகிய நாபோத்திடம் பேசினேன். "உன் திராட்சைத் தோட்டத்தை அதற்கான வெள்ளிக்கு எனக்குக் கொடுத்து விடு. உனக்கு விருப்பமானால், அதற்குப் பதிலாக வேறு திராட்சைத் தோட்டத்தைத் தருவேன்" என்றேன். அதற்கு அவன் "என் திராட்சைத் தோட்டத்தை உமக்குத் தரமாட்டேன்" என்று சொல்லிவிட்டான்" என்றான்.

**பதில்பாடல் :** ஆண்டவரே என் பெருமூச்சைக் கவனித்தருளும்.

### நற்செய்தி : மத்தேயு 5 : 38 - 42

அக்காலத்தில் இயேசு மக்கள் கூட்டத்தை நோக்கிக் கூறியதாவது:கண்ணுக்குக் கண்", "பல்லுக்குப் பல்" என்று கூறப்பட்டிருப்பதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள்.ஆனால் நான் உங்களுக்குச் சொல்கிறேன் தீமை செய்பவரை எதிர்க்க வேண்டாம். மாறாக, உங்களை வலக்கன்னத்தில் அறைபவருக்கு மறுகன்னத்தையும் திருப்பிக் காட்டுங்கள். ஒருவர் உங்களுக்கு எதிராக வழக்குத் தொடுத்து, உங்கள் அங்கியை எடுத்துக்கொள்ள விரும்பினால் உங்கள் மேலுடையையும் அவர் எடுத்துக்கொள்ள விட்டு விடுங்கள். எவராவது உங்களை ஒருகல் தொலை வரக் கட்டாயப்படுத்தினால் அவரோடு இரு கல் தொலை செல்லுங்கள். 42 உங்களிடம் கேட்கிறவருக்குக் கொடுங்கள் கடன் வாங்க விரும்புகிறவருக்கு முகம் கோணாதீர்கள்""என்றார்

**தியானம்:** ஆசையும், அபகரிப்பும் கொலைகளும், கொள்ளைகளும் சூழ்ச்சியும், சூப்பனமும், ஆணவமும், அதிகார வெறியும் எல்லை மீறி மனிதகுலம் அழிவின் விழிம்பை நோக்கிப் பயணம் செய்து கொண்டிருந்த காலம் அது. இன்றைய முதல் வாசகத்தில் நாம் வாசிக்கின்ற நிகழ்வு அதற்குச் சான்று. மனித குலம் அன்று எத்துணை கடினமனம் கொண்டதாக இருந்ததோ அதற்கமைவாக வேசட்ட திட்டங்களும் அமைந்திருந்தன. 'கண்ணுக்குக் கண் பல்லுக்குப் பல்' என்பது அன்றைய சட்டதிட்டங்களில் ஒன்று. இறைமகன் இயேசுவின் வருகை, மனித குலவரலாற்றையே மாற்றியமைக்கின்றது. இறைவனின் அன்புப் பெருக்கத்தால் படைக்கப்பட்ட இவ்வுலகமும், மனிதகுலமும் அதே அன்பு என்ற அச்சாணியில் மட்டுமே சுழன்று கொண்டிருக்க வேண்டுமென்று விரும்புகின்றார் என்பதை இன்றைய நற்செய்தி வழியாக நமக்கு அவர் வலியுறுத்துகின்றார். ஆனால் உண்மையில் என்ன நடக்கின்றது? என்பதை நம் அன்றாடவாழ்க்கையில் நாம் கண்கூடாகக் காண்கின்றோம். பழைய ஏற்பாட்டு மனிதர்கள் எவ்வாறு வாழ்ந்தார்களோ, அதுபோலவே, ஏன் அதைவிட மோசமாக இன்று பலரின் வாழ்க்கைமுறை அமைந்திருக்கவில்லையா? கிறிஸ்தவர்கள் என்று நம்மை அழைத்துக் கொள்ளும் நமது வாழ்க்கை இன்று எவ்வாறு அழைந்திருக்கின்றது? சிந்திப்போம். கிறிஸ்துவின் கொள்ளைகளையும், படிப்பினைகளையும் ஆதாரமாககக் கொண்டு நமது வாழ்க்கை அமைவில்லையெனில், நாம் நம்மை கிறஸ்தவர்கள் என்று அழைத்துக் கொள்ளத் தகுதியற்றவர்கள். மனிதகுலம் மாற்றம் பெறவேண்டுமானால் முதலில் கிறிஸ்தவர்களாகிய நாம் மாற வேண்டும் என்பதே இன்றைய நற்செய்தியாகும்.